2003 ஜனவரி 31]

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே அது பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொன்னதற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் நல்லுக்குறிச்சி கால்வாய்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே. சிவசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.கே. சிவசாமி.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நல்லுக்குறிச்சியில் உள்ள கால்வாயை வெட்டிச் சீர்செயய வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லுக்குறிச்சி கால்வாயில் இதுவரை 5,000 மீட்டர் நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுச் சீர் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,760 மீட்டருக்கான சீர் செய்யும் பணி அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே. சிவசாமி.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் மிகவும் அவசியமான ஒன்றாகும். நரிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர், ஒட்டங்குளம், நல்லுக்குறிச்சி, வீராளங்குளம், புளியாண்டார்கோட்டை, சொல்லங்குடி ஆகிய

கிராமங்களில் வாழ்கின்ற இரண்டாயிரம் விவசாயப் பெருமக்கள் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசிலனை செய்து, இந்த ஆண்டே பணியை அரசு தொடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள 1,760 மீட்டருக்கான சீர் செய்யும் வேலையை, இப்பணியின் அவசியம் கருதி வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே. சிவசாமி.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் செய்வதற்கு உறுதி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல், நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. ஞானசேகரன், செ.கு. தமிழரசன் மற்றும் ப. அரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க அரசு சட்டம் இயற்றி ஆணை பிறப்பித்தும் இன்னும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க 9—3—2002—ல் ஆளுநர் உரையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.